Registered as a Newspaper
பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 57
திங்கட்கிழமை
22 ஜனவரி 2024

முச்சந்தி முரளி



"இனியாவது
உவையள் தங்களுக்க
பிடுங்குப்படாமல்
ஒண்டானால் நல்லதுதான்
பாருங்கோ"



## மக்கள் உரிமையை வென்றெடுக்க

# தமிழ்த்தேசியக் கட்சிகளே ஓரணியாகத் திரள்க!

## தமிழரசின் புதிய தலைவர் சிறீதரன் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 22**

**2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறான நிலையை - தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலையை - தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எய்தவேண்டும். எனவே தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க்கட்சிகளும், தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஓரணியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன் - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

15

## தமிழரசின் தலைவராக தெரிவானார் சிறீதரன்!

யாழ்ப்பாணம், ஜன. 22
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தல், திருகோணமலை நகராட்சிமன்ற கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன்,நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்டனர். யோகேஸ்வரன் தேர்தலுக்கு முன்னதாகவே

15

## ஒன்றாக பயணிப்போம்!

### சுமந்திரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22
ஜனநாயகத் தேர்தல் மூலம் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 'தலைவர்' சிறீதரனுக்கு எனது முழுமையான

15

## உணவருந்தியவர் மயங்கிச் சாவு!

விரிவு பக்.15

## ஹெரோய்ன் பாவனை இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22
உயிர்கொல்லிப்போதைப்பொருளானஹெரோய்னுக்கு அடிமையான இளைஞர் ஒருவர், அளவுக்கதிகமான ஹெரோய்ன் பாவனை

15

## தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும் தமிழரசு!

### புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 22
தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்குத் தமிழரசுக் கட்சி உரிய பங்களிப்புக்களை வழங்க வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவரான சித்தார்த்தன் வலியுறுத்தியுள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை முன்னிட்டு அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

15

## சிறீதரனை வாழ்த்திய ரணில்!

கொழும்பு, ஜன. 22
தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனுக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
அணிசேரா மாநாட்டுக்காக உகண்டாவின் தலைநகர் கம்பலாவில் தற்போது ரணில் முகாமிட்டுள்ளார். தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பான தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவருக்கு நேற்றுத் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே சிறீதரனுக்கு நேற்றுமாலை 3 மணியளவில் தொலைபேசி அழைப்பெடுத்து அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

15




## வெசாக் கொண்டாட ஐ.நா.விடம் 'பிச்சை!'

இந்த வருடத்தின் வெசாக் நிகழ்வுகளைக் கொண்டாடுவதற்கு ஐ.நா.விடம்கோரிக்கைவிடுக்கப்படவுள்ளதாக சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.
அமைச்சரின் உதவிக் கோரிக்கையை சீன - பௌத்த கலாசார ஊக்குவிப்புச் சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி சங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சரின் கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கைக்கு வரவுள்ளனர்.
இலங்கைப் பிக்குகளுக்கு சீனாவில் மகாயான பௌத்தம் பற்றிக் கற்பதற்கு வசதிசெய்து கொடுக்குமாறும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி ஆவணங்கள் கையளிக்கவில்லை!

## வவுனியாவில் மீள்குடியேற்ற மக்கள் ஆதங்கம்

**வவுனியா, ஜன.22**
**மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 30 வருடங்கள் கடந்தபோதும் காணி ஆவணங்கள் வழங்கப்படவில்லை. அத்துடன் அத்தியாவசிய வசதிகள்கூட ஏற்படுத்தித் தரப்படவில்லை என்று வவுனியாவிலுள்ள 13 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

போர் காரணமாக இடம்பெயர்ந்த பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 385 குடும்பங்கள் காத்தான் கோட்டம், ஊர்மிளா கோட்டம், இராமையன்கல், பிரமணாலங்குளம், நெளுக்குளம், அம்பிகை பாலன் கோட்டம், தச்சன்குளம், அருவித்தோட்டம், ஈசன்குடியிருப்பு, புதிய வேலர் சின்னக்குளம், தாஸ் கோட்டம், சேகர் கோட்டம், குகன்நகர் ஆகிய கிராமங்களில் குடியேற்றப்பட்டன.


குடியேற்றம் செய்யப்பட்டு 30 வருடங்கள் கடந்த நிலையிலும் மக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கப்படவில்லை. அத்துடன் வீட்டுத்திட்டம், மலசலகூடம் என்பன முறையாக வழங்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் எமது காணிக்குரிய நிரந்தர ஆவணங்களைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-18)

## கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, ஜன.22
தெல்லிப்பழை, மாதனை கோணாசீமா ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன் கிழமை காலை 9.50 மணி முதல் மு.ப.10.50 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.
மஹா கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள், பூர்வாங்கக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். (ப-66)

## விபத்தில் ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 22
ஓட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். வேலுப்பிள்ளை அமல்ராஜ் (வயது-36) என்றநபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கடந்த 17ஆம் திகதி செம்மணிப் பகுதியில் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்தபோது, வீதிக்குக் குறுக்காக நாய் பாய்ந்துள்ளது. நாயைக் காப்பாற்றுவதற்காக ஓட்டோவைச் சடுதியாகத் திருப்பியபோதே அவர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)



## நகை திருடி ரீ.வி. வாங்கிய சந்தேகநபர்கள் சிக்கினர்

கிளிநொச்சி, ஜன.22
முழங்காவிலில் இடம்பெற்ற நகைத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பெண்ணொருவர் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கடந்த வாரம் முழங்காவில் பகுதியிலுள்ள வீடொன்றில் ஆள்கற்ற சந்தர்ப்பத்தில் 8 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடி திருட்டுப்போயுள்ளது என்று முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
முறைப்பாட்டுக்கமைய முழங்காவில் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தலைமையிலான குழு மேற்கொண்ட விசாரணையில் யாழ்ப்பாணத்திலுள்ள நகை விற்பனை நிலையம் ஒன்றில் அந்தத் தாலிக்கொடி விற்பனை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.
அத்துடன் சந்தேகநபர்கள் விற்று தொலைக்காட்சி உள்ளிட்ட இதர பல பொருள்கள் கொள்வனவு செய்தமையும் தெரியவந்தது. சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-113)

## வாழைப்பழத்தின் விலை எகிறின!

யாழ்ப்பாணம், ஜன. 22
யாழ்.குடாநாட்டில் வாழைப்பழங்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. அதில் கதலி வாழைப்பழத்தின் விலை என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த வருட ஒக்ரோபர் மாதத்தில் வீசிய காற்றால் வாழைமரங்கள் குருத்தடைப்பு நோயால் பாதிக்கப்பட்டன.
இதனால் உற்பத்தி வீழ்ச்சியுற்று சந்தைகளுக்கு குறைந்தளவு வாழைக்குலைகளே வருவதால் அவற்றின் விலை எகிறியுள்ளது. கதலி வாழைப்பழம் தற்போது கிலோ 150 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)




## முட்டை விலை மீளவும் உயர்வு

கொழும்பு, ஜன.22
'வற்' அதிகரிப்பால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளின் விலையை உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
'வற்' அதிகரிப்பால் இறக்குமதி செய்யப்படும் முட்டையை 35 ரூபாவுக்கு விற்கமுடியாததால்சதொச விற்பனை நிலையங்கள் முட்டை விற்பனையை மட்டுப்படுத்தியுள்ளன.
இதனால் முட்டை ஒன்றின் விலை நேற்று முதல் 43 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வஞ்சிக்கும் இயற்கை

கிளிநொச்சி, ஜன. 22
நெல் காயவிடும் தளவசதியின்மையால் வீதியில் காயவிடப்பட்ட அறுவடை நெல் மழையில் நனைந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்று கிளிநொச்சி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
பரந்தன் - பூநகரி வீதியில் விவசாயிகளால் காயவிடப்பட்ட நெல்லே மழையில் நனைந்துள்ளது.
நோய்த்தாக்கத்துக்கு மத்தியில் குறைந்த விளைச்சலோடு அறுவடை செய்த நெல்லை மழையும் நனைத்து பாதிப்படையச் செய்துள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-113)



## விவசாயிகளுக்கு விரைவில் நஷ்டஈடு

வவுனியா, ஜன.22
வவுனியா மாவட்டச் செயலகத்தில் மழை, வெயில் காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கு விரைவாக நட்டஈடு வழங்கப்படும் என கிராமிய, பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவசாயிகளுக்கான லாண்ட் மாஸ்ரர் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வவுனியா மாவட்டத்துக்கு 6 லாண்ட் மாஸ்ரர்களும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 6 லாண்ட் மாஸ்ரர்களும் வழங்கப்பட்டன.
பொருண்மியம் நலிந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமைந்துள்ளது எனவும் விவசாயிகளுக்கான ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ப-110)

## சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.22
இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தி இராம ஜென்ம பூமியில் மிக பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இராமர் கால்பதித்த திருவடி நிலை அருகே அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
இலங்கை சிவசேனை அமைப்பு வழிபாட்டுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்: 26.10.1929

மறைவு: 18.01.2024

## திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

மலேசியாவை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஈஸ்வரபாதம் வசந்தரூபா அவர்கள் கடந்த (18.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற ஈஸ்வரபாதம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற ஈஸ்வரபவானி மற்றும் ரூபரஞ்சனி, சரவணபவன் (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், நிர்வாக இயக்குநர் - உதயன் சஞ்சீவி நிறுவனம்), ஸ்ரீரஞ்சனி (லண்டன்), முகுந்தன் (லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தினி (இந்தியா), கீதா கேதீஸ்வரி (லண்டன்), நவநீதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பாலசுப்பிரமணியம், யசோதை, சக்திதாசன் (லண்டன்), விமலாதேவி (லண்டன்), பிரேமினி (லண்டன்), ராஜேந்திரன் (இந்தியா), ஸ்ரீகாந்தா (லண்டன்), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ரஞ்சிதம் ராஜரத்தினம் (சிங்கப்பூர்), லீலா ரங்கநாதன் (மலேசியா), காலஞ்சென்ற அமலரதி மகேஸ்வரன் (மலேசியா) மற்றும் காலஞ்சென்ற மதனபூபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரமணன், இசுரிகா, உமையாள், ஜெயபிரகாஷ், சிந்தியா, சுரேஸ்குமார், அபிராமி, அமர், சித்ரூபி, பிரகதீபன், பிரவீன், வினிதா வைஷ்ணா, சாம், லக்ஷ்மி, விதுன், ரம்யா, வினோத், பிரஷிகன், சேயோன், விஷ்ணு ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கேசவா, துருவா, நேத்ரா, டீரன், அக்ஷ்யன், ஆராதனா, லூஷியஸ், ஐவி, நோஆ ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2024) திங்கட்கிழமை காலை 08.30 மணிக்கு 105, இராஜ வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**105, இராஜ வீதி,**
**கோப்பாய், யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருமஞ்ச வெள்ளோட்டம்

மாவிட்டபுரம், ஜன.22

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 24 அடி உயரம் கொண்ட திருமஞ்ச வெள்ளோட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து தைப்பூசத் திருநாளான மறுநாள் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மாவைக் கந்தப் பெருமான் புதிய திருமஞ்சத்தில் பவனி வருவார் என மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ.இரத்தின சபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தோற்றப் பொலிவுகூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**இடபம்:** ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்னப் பிரச்சினைகள் அதிகமாகும். நீங்கள் எதை பேசினாலும் அதை எல்லோரும் தவறாக புரிந்து கொள்வார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். மனஸ்தாபங்கள் ஏற்படும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள். வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். மற்றவர்களுக்காக செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**சிம்மம்:** குடும்பத்தில் பிரச்சினைகள் நீங்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும் நாள். வியாபாரம் சூடுபிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும்.

**கன்னி:** புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்:** முகப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்கள் ஆவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருச்சிகம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். ஆதரவுப் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**தனுசு:** சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அமோகமான நாள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். அக்கம்பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கு வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

## புத்தக அரங்க விழா

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் நூறு மலர்கள்' மலரட்டும் புத்தக அரங்க விழா எதிர்வரும் 25 ஆம்,26 ஆம்,27ஆம்,28 ஆம் (வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சிறுவர் அரங்கக் கொண்டாட்டம் , 26ஆம், 27ஆம் திகதி மாலை 5 மணிக்கு நகைச்சுவை நாடகங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் முற்பகல் 8.30 முதல் மாலை 5 மணிவரை மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும், மாலை 3 மணிக்கு ஈழத்து நூல்களின் அறிமுகமும் இலக்கியக் கலந்துரையாடல் என்பன இடம் பெறவுள்ளன. (ப-159)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணம், கல்வளை வீதி, சண்டிலிப்பாய் ஸ்ரீ காளியம்மாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு எண்ணெய்க் காப்புடன் ஆரம்பமாகி மறுநாள் 24ஆம்திகதி புதன்கிழமை பூஜைகளுடன் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ப-63)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.22

வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் இயல்வாணன் எழுதிய 'யாரும் பாடலாம் என்னை' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ்.கோப்பாய், நாவலர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் க.தணிகாசலம் தலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக் கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் சோ.தேவராஜா நூல் வெளியீட்டுரையையும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியரும், எழுத்தாளருமான ந.குகபரன், கவிஞர் வ.வடிவழகையன் ஆகியோர் நூலின் மதிப்பீட்டுரைகளையும் கவிஞர் இயல்வாணன் ஏற்புரையையும் ஆற்றவுள்ளனர். (ப-66)



## பண்பாட்டுப் பொங்கல்விழா

யாழ்ப்பாணம், கோப்பாய்ப் பகுதியிலுள்ள கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள சரஸ்வதி சிலைக்கு முன்பாகப் பண்பாட்டுப் பொங்கல் விழா கடந்த புதன்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பொங்கலுக்குரிய பண்பாட்டு அம்சங்கள், நடைமுறைகள் தொடர்பான விளக்கத்தினைக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் விளக்கினார். (ப-66)



## சிறப்பு அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.22

இந்தியாவின், அயோத்தி ஸ்ரீ இராமர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிறப்பு அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து பூசைகள், பஜனை வழிபாடுகள் என்பனவும் நடைபெறவுள்ளன. (ப-66)

# ஊரெழு கிராம இளைஞர்களால் கசிப்புக் குகைசுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

ஊரெழுவில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று அந்த ஊர் இளைஞர்களால் சுற்றிவளைக்கப்பட்டு கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் என்பன மீடகப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கிராமத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப் படுத்தும் நோக்கில் இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுவொன்று கோப்பாய்ப் பொலிஸாரின் ஒழுங்கமைப்பில் அண்மையில் ஆரம்பிக் கப்பட்டது.

அந்தக் குழு கைவிடப்பட்ட தோட்டம் ஒன்றை முற்று கையிட்டபோதே கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சான்றுப் பொருள்களைக் கைப்பற்றினர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-100, 125)

## கோபுரத்துக்கு அடிக்கல்

கொக்குவில், ஜன.22

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய சண்முகர் (தெற்கு) வாசல் பஞ்சதள இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை காலை 9.56 மணி முதல் மு.ப 11.02 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது என்று ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காலத்தின் கட்டளைக்கு காது கொடுப்பாரா?

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதன்முறையாகத் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட தலைவரான சிறீதரனுக்கு இனிமேல்தான் உண்மையான சவால்கள் காத்திருக்கின்றன. தமிழினத்தின் பாரம்பரியக் கட்சி என்ற அடையாளம் மட்டுமே இப்போது தமிழரசுக் கட்சியிடம் எஞ்சியிருக்கிறது. ஒருகாலத்தில் தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதியாக எழுச்சி பெற்றிருந்த அந்தக் கட்சி, இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல மக்கள் செல்வாக்கை மிகப்பெருமளவில் இழந்துவிட்ட நிலையிலேயே அதன் தலைமைப் பொறுப்பை சிறீதரன் கையேற்றிருக்கிறார். இந்தளவுதூரம் நலிந்துகிடக்கும் கட்சியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டுமானால், தமிழரசுக் கட்சி எங்கே சறுக்கியது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். அந்தக் காரணத்தைக் கண்டறிந்தால் மட்டுமே, தமிழரசுக் கட்சி மீளப்பொலிவுறும். தமிழ்த் தேசியப் பாதையில் இருந்து தடம் மாறியமை, மறைமுகமான புலிநீக்க அரசியல், வெளிப்படைத் தன்மையற்ற அரசியல்நகர்வுகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து பங்காளிக்கட்சிகளைத் திட்டமிட்டு வெளியேற்றி அவர்களை தமக்கு எதிராளிகளாக மாற்றியமை போன்ற பல காரணிகளை தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சிக்கு பட்டியலிடலாம்.

இந்த நிலையில் 'தமிழ்த் தேசியத்தை சகல கட்சிகளும், மக்கள் நலனை முன்னிறுத்தி, கட்சி நலன்களுக்கப்பால், தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஓரணியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக - ஒன்றிணைய வாருங்கள்' என்று தமிழரசுக் கட்சியின் தலைவரான சிறீதரனின் அழைப்பு, நம்பிக்கையின் ஒளிக்கீற்றை பலமாகப் படரவிட்டுள்ளது. ஆனால் இந்த அழைப்பு வெறுமனே சம்பிரதாயபூர்வமானதாக இல்லாமல், செயலுருப்பெறவேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பு. கூட்டமைப்பை பலப்படுத்துதல் என்பது தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்துதல்தான். முன்னர்போல தமிழரசுக் கட்சி, கூட்டமைப்புக்கு எஜமானன் போல நடந்து கொள்ளாமல், தானும் ஒரு பங்காளியாக இனிவரும் காலங்களில் நடந்து கொள்ளுமானால் 2009க்கு முற்பட்ட பொற்காலத்தை கூட்டமைப்பும் அடையலாம், கூடவே தமிழரசுக் கட்சியும் அடையலாம்.

2009க்குப் பின்னர் தமிழ் அரசியல் தரப்புகளை நோக்கி முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில் முதன்மையானது, 'தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தமிழ் அரசியல் தரப்புகளிடம் ஒரு வழிவரைபடம் இல்லை' என்பதுதான். ஒரு வழிவரைபடம் இல்லாமல்தான், 2009க்குப் பின்னரான தமிழர்களின் அரசியல்நகர்வுகள் அமைந்திருக்கின்றன. தமிழ் மக்களின் அரசியல் உரிமை, மொழியுரிமை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகளின் விடுதலை, தமிழ் மக்களின் காணி அபகரிப்புகள், தொல்லியலின் பெயரால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டம் என்ன? எந்த வகையில் தமிழரசுக் கட்சி அதற்கான நகர்வுகளை மேற்கொள்ளப்போகின்றது? என்பன பற்றிய பொருத்தமான வழிவரைபடத்தை தமிழர் தரப்பின் சார்பில், தமிழரசுக் கட்சி உருவாக்கவேண்டும். கூடவே எமது சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு முன்னெடுப்புகள் பற்றிய திட்டமிடலையும் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு தமிழரசுக் கட்சியின் தலைவரான சிறீதரனுக்கு உண்டு. ஆனால் இவற்றையெல்லாம் அவர் தனியொருவராக நிகழ்த்திக்காட்டுவது கடினமே. அதற்கு அவர் ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவமும், அறிவும், தேர்ச்சியும் கொண்டவர்களை ஒருங்கிணைத்து 'சிந்தனைக் குழாமை' உருவாக்கவேண்டும். அவர்களின் அறிவுரைகளின் படி திட்டங்களைத் தீட்டி, காரியங்களை முன்னெடுப்பதன் ஊடாக நிதானமான அதேசமயம் பலமான தடத்தை தமிழர்தரப்பு பதிக்கமுடியும். வெறுமனே ஒரு கட்சியின் தலைவர் என்றில்லாமல், ஓர் இனத்தின் தலைவராகத் தன்னைக் கருதிக்கொண்டு சிறீதரன் செயலாற்ற வேண்டிய காலம் இது. காலத்தின் கட்டளைக்கு அவர் காதுகொடுப்பாரா?



# ஜனாதிபதித் தேர்தலில் பின்வாங்கும் பெரமுன!

கொழும்பு, ஜன.22

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளரை நிறுத்தாது என்றும், ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு வங்கியை அதிகரிப்பததே அதன் நோக்கம் எனவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட கருத்துகளுக்கு அப்பால் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச புதிய நிலைப்பாட்டை எடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பகிரங்கமாக ஆதரவு தெரிவிப்பதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குச் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு பகிரங்கமாக ஆதரவு வெளியிட்டால் பெரமுன கட்சி பிளவுபடலாம் என்ற அச்சம் பெரமுன தலைவர்களிடம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## திருப்பியடிப்பேன் மிரட்டும் நிஷாந்த

எவரேனும் என்னிடம் சண்டித்தனம்காட்ட முற்பட்டால் தாக்கிவிட்டு சிறைச்சாலைக்குச் செல்வேனே தவிர, அடிவாங்கிக் கொண்டு மருத்துவமனைக்குச் செல்லமாட்டேன் என்று எச்சரிக்கைவிடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்குச் சென்றிருந்த சனத் நிஷாந்தவுக்கு பிரதேச மக்கள் வெளியிட்ட எதிர்ப்புக் குறித்து கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தேர்தல்மூலம் வேண்டுமென்றால் மக்கள் எம்மை வீட்டுக்கு அனுப்பலாம். ஆனால், சண்டியர்களுக்காக விட்டுப்போகத் தயாரில்லை. ஜே.வி.பி.யினருக்கு எம்மை விரட்ட வேண்டிய தேவை இருந்தால் நேரில் வரட்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## பிரதமர் ஆட்சிக்கு இது நேரமல்ல

கொழும்பு, ஜன.22

தற்போதைய நாடாளுமன்றத்தில் ஊழல்வாதிகளும் உள்ளனர். அதனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, பிரதமர் ஆட்சிமுறைமையைக் கொண்டுவருவதற்கான நேரம் இதுவல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா தெரிவித்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, பிரதமர் ஆட்சி முறைமையைக் கொண்டுவர வேண்டுமெனில் நாடாளுமன்றம் பலம் மிக்கதாக இருக்க வேண்டும்என்றும்அவர்மேலும் தெரிவித்தார். (எ-44)

## நிலநடுக்கம்

இந்தியப் பெருங்கடலின் தென் மேற்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.39 மணியளவில் 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில், மடகஸ்காரில் இருந்து ஆயிரத்து 636 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## எதிரணியினர் வதந்தி

### ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

விபசாரத்தை சட்டப்பூர்வமாக்கும் எந்தவொரு திட்டமும் தேசிய மக்கள் சக்தியிடம் கிடையாது என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என்பன விமர்சித்தமைக்கே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-44)

**நாளை**

**23.01.2024**
**செவ்வாய்க்கிழமை**
**தை 09**
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 03.36 -05.06
பிரதோஷ விரதம்

**நாளொரு நல்வார்த்தை**

**தலைவனின் வேகமே அந்த அணியின் வேகம்**

- லீ ஐயகோக்கா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், தெல்லிப்பழைப் பகுதியில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பட்டிப் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. (ப-66)



தைப்பொங்கல் விழாவினை முன்னிட்டு தெல்லிப்பழைப்பிரதேசசெயலக அலுவலர்களிடையே போட்டிகள் நடத்தப்பட்டன. பொங்கல்விழாவில் போட்டியில் வெற்றி பெற்ற அலுவலர்களுக்கு பிரதேச செயலர் திருமதி சு. சிவகெங்கா பரிசில்களை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கினார். (ப-9)

## இரணைமடுவில் பொங்கல் விழா



கிளிநொச்சி, ஜன.22

இரணைமடுக் குளத்தின் 104 ஆவது ஆண்டை முன்னிட்டு இரணைமடுக் கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் வி. நடராசா தலைமையில் 104 பானைகள் வைத்துக் கலை பண்பாட்டு நிகழ்வு கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றிலில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து விவசாயிகளுக்கான மதிப்பளித்தல் நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகளுடன் விருந்தினர் உரைகள் நடைபெற்றன.

நிகழ்வில் துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், நிறுவனத்தினர், விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-113-13)



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் 107 ஆவது பிறந்த தினம் கடந்த வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள எம். ஜி. ஆர். சிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. எம். ஜி. ஆர். நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நலிவுற்ற குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எம். ஜி. ஆர். ரசிகர்களும் கலந்துகொண்டனர். (ரி-23)

## பாஷையூர், குருநகரில் டெங்குத்தாக்கம் உயர்வு


பாஷையூர் குருநகர்ப் பிரதேசங்களில் டெங்கின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது. பாஷையூரின் முதலாம், இரண்டாம், 3ஆம் குறுக்குகளிலும் குருநகரில் பீச் றோட்டிலும் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்தப் பகுதிகளில் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு புகை அடித்தல் உள்ளிட்ட பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)



## சான்றிதழ் வழங்கல்

முல்லைத்தீவு, ஜன.22

முல்லைத்தீவு - முள்ளியவளை, மாமூலைப் பகுதியில் வித்தியாதீபம் தையல் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சியைக் கற்று நிறைவு செய்த இரண்டாம் அணி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வித்தியாதீபன் அமைப்பின் இணைப்பாளர் லிகிரதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ப-19)



யாழ்ப்பாணம், சுதுமலைப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பட்டிப்பொங்கல் பண்டிகை தமிழ் மக்களால் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வின்போது பொங்கல் பொங்கி, ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் நடத்தி, பசுக்களுக்கு பொங்கல் ஊட்டிப் பட்டிப்பொங்கலைக்கொண்டாடினர். (ப-27)



## சந்திப்பு

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஐ.ஓ.எம். பிரதிநிதிகளுக்கும் மாவட்டச் செயலக அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்புகடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உள சமூக, வாழ்வாதாரமேம்பாடு, இழப்பீடுகள் தொடர்பான கடந்தகால மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட செயலர் எஸ். முரளிதரன், மாவட்ட செயலர் திருமதி இ. நளாஜினி, ஐ. ஓ. எம். நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் இந்த விடயத்தோடு தொடர்புடைய மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-13)



கிளிநொச்சி, அக்கராயன் கமநலசேவை நிலையத்தில் கமக்கார அமைப்பின் தலைவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அக்கராயன் கமநல குழுத் தலைவர் ம. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக கமநல சேவை நிலையத்துடன் இணைந்து கமக்கார அமைப்பின் தலைவர்களாக பணியாற்றி வருபவர்களே இவ்வாறு மதிப்பளிக்கப்பட்டனர். (ரி-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரப்பாதையில் பயணிக்கும் யுக்திய

## ஹிருணிகா எச்சரிக்கை

**கொழும்பு, ஜன.22**

**யுக்திய நடவடிக்கை பயங்கரமான பாதையிலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றது, இது எங்கு சென்று முடியுமோ தெரியவில்லை, பதில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவுக்கமைய , பதவி உயர்வுக்காக தன்னிச்சையாகச் செயற்படும் பொலிஸ் அதிகாரிகளுக்கு அடுத்த ஆட்சியில் நிச்சயம் தண்டனை வழங்கப்படும்.**

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாரம்மல பகுதியில் சிவில் உடை அணிந்திருந்த பொலிஸ் அதிகாரியொருவர், அப்பாவி பொதுமகன் ஒருவரை சுட்டுக் கொலை செய்துள்ளார். பொலிஸாருக்கு தன்னிச்சையாகச்செயற்படும் அதிகாரத்தை பதில் பொலிஸ்மா அதிபரும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமே வழங்கியுள்ளனர். துள்ளினால் சுட்டுக்கொல்வோம் என அமைச்சர் டிரான் அலஸ் எச்சரிக்கை விடுத்திருந்தார். யுக்திய நடவடிக்கைமூலம் வேண்டுமென்றே கைதுகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறு பல அநீதிகள் நடக்கின்றன. இந்த போக்கை அனுமதிக்க முடியாது-என்றார். (எ-44)

# ஆயுதங்கள் தயாரிப்பு; இருவர் கைது

கொழும்பு, ஜன. 22

திருக்கோவில்விநாயகபுரம் பகுதியில் உள்ளூர் ஆயுதங்களைத் தயாரிக்கும் நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு மூன்று பேர் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்தத் திடீர் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

அங்கு சட்டவிரோதத் துப்பாக்கிகளைத் தயாரித்த ஒருவர் மற்றும் ஆயுதத் தயாரிப்புக்கு உதவியாளராகப் பணியாற்றிய இருவரே கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

# துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 22

மாத்தறையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# கஞ்சா செய்கை மூவர் சிக்கினர்!

கொழும்பு, ஜன. 22

யால வனப்பகுதியில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதிகள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன.

இராணுவத்தினருக்கு கிடைத்த உளவுத்துறை தகவலுக்கமை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்தக் குற்றச் செயல் முறியடிக்கப்பட்டது. இதன்போது 6 கோடி மதிப்புள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த கஞ்சா யால வனப்பகுதியிலேயே பயிரிடப்பட்டு பொதி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




# வாழ்க்கைச்செலவு உயர்வால் மாணவர்கள் இடைவிலகல்!

## ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 22

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு காரணமாக பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள மாணவர்கள் பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுகின்றமை அதிகரித்துள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் மாத்திரம் கடந்த வருடத்தில் ஆயிரத்து 989 மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் 570 மாணவர்களும், ஹற்றனில் 541 மாணவர்களும், கொத்மலையில் 319 மாணவர்களும், கம்பளையில் 250 மாணவர்களும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். தற்போதைய பொருளாதார நிலையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# சிவில் உடையில் சோதனை இரத்து

சிவில் உடையில் போக்குவரத்துச் சோதனைகளை மேற்கொள்ளவேண்டாம் என்று பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாரம்மலை பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# புதினம் தெரியுமோ ?

ஒருமாதிரி முக்கித்தக்கி தமிழரசுக்கட்சியின்ர தலைவர் எலக்சன் நடந்து முடிஞ்சிட்டுது. இந்த எலக்சனை நடத்துறதில காட்டின அக்கறையை விட, எப்பிடி இதை நடத்த விடாமல் செய்யலாம் எண்டு சிலர் காட்டின அக்கறைதான் அமோகம். எலக்சன் நடக்கிற கடைசிச் செக்கன் வரை ஏதோ ஒரு குறளிவித்தை நடந்துகொண்டுதான் இருந்ததாம்.

எலக்சனுக்கு முதல்நாள் இரவு ஒரு குழப்பம். வாக்குப் போடத் தகுதியான 40 பேரை நிப்பாட்டிப் போட்டு அவைக்குப் பதிலா வேற ஆக்களைப் போட்டு ஒரு லிஸ்ட் அனுப்புப்பட்டிருக்கு எண்டு ஒரு தகவல் தீயாப் பரவத் தொடங்கிட்டுது. எலக்சன் ஏற்பாடு முழுக்க, திருகோணமலை மாவட்டக் கிளைதான் செய்திருந்தது. அவைக்குத்தான் இந்த லிஸ்ட் அனுப்புப்பட்டிருக்கு. ஆனால் "அந்த லிஸ்ட்டை பொதுச் செயலாளர் 'சீல்' பண்ணித்தான் அனுப்பி இருக்கிறார். இருக்கிற பேர் விவரங்களை நாளைக்குதான் சொல்லலாம்" எண்டு திருகோணமலைக்குப் பொறுப்பான குகதாசனும் சொல்ல, இந்தக் குழப்பம் இன்னும் கூடிட்டுது.

ஏனெண்டால் பொதுச்செயலாளர் தனக்கு கதைக்கக் கூட ஏலாமல் இருக்கெண்டு, ஒரு கிழமைக்கும் மேலா கட்சித் தலைவரா இருந்த மாவையரோட கதைக்கிறதே இல்லை. எலக்சன் நடக்கிறதுக்கு முதல்நாள் திருகோணமலையில நடக்க இருந்த மத்தியகுழுக் கூட்டத்தைக் கூட, கட்சித் தலைவருக்குச் சொல்லாமல் தன்ர இஷ்டப்படி, தனக்கு வருத்தமெண்டு காரணம் காட்டி நிப்பாட்டிப் போட்டார் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம். 'ஏன் மத்தியகுழுக் கூட்டம் நடக்கேலை? மத்திய குழுக் கூட்டம் நடக்காட்டி எலக்சனும் நடக்காதா?' எண்டு மாவையரை மீடியாக்காரர் விடுத்து விடுத்துக் கேட்டிருக்கினம். அதுக்கு "எனக்கொண்டும் தெரியாது. செயலாளர் ஏதோ கடிதம் அனுப்பி இருக்கிறார். அதைப் பார்த்துப் போட்டுத்தான் சொல்லலாம்" எண்டு சொன்ன மாவையர், அதுக்குப் பிறகு அந்தக் கடிதத்தைப் பார்த்தபிறகும் 'எலக்சன் நடக்குமா? இல்லையா?' எண்டு சொல்லவேயில்லை. மத்தியகுழுக்கூட்டம் நடந்திருந்தால், அதில பொதுச்சபை உறுப்பினர்கள் எல்லாரின்ரையும் பெயர் விவரத்தை காட்டி, ஒப்புதல் எடுத்திருக்க வேணும். அப்பிடி பேர் விவரத்தைக் காட்டினால், தாங்கள் செய்த ஓட்டுமாட்டு வெளியில வந்திடும் எண்டுதான், மத்தியகுழுக்கூட்டத்தை செயலாளர் தலைவருக்கே தெரியாமல் நிப்பாடியிருக்கிறார் எண்டுதான் கனபேருக்கு டவுட். அதுக்கேத்தமாதிரி, முதல்நாள் மட்டும் வருத்தமெண்டு சொல்லிக்கொண்டு திரிஞ்ச பொதுச் செயலாளர் 'சீல்' வைச்ச பட்டியலை அனுப்பியிருக்கிறார் எண்டால் ஆருக்கும் குழப்பம் வரத்தானே செய்யும்.

ஆனாலும் கடைசியில அந்த டவுட் ஓரளவுக்கு உண்மையாகிட்டுது. முதல் வந்த லிஸ்ட்டில இருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த 12 பேரை நிப்பாட்டிப்போட்டினம். அவையை கடைசி மட்டும் எலக்சன் நடக்கிற மண்டபத்துக்குள்ள விடேலையாம். அதைவிட, இன்னும் கொஞ்சப்பேரையும் லிஸ்ட்டில பேர் இல்லையெண்டு சொல்லி, உள்ளுக்க விடாமல் வெளியில இருந்தி வைச்சுப் போட்டு, பிறகு கடைசிநேரத்தில உள்ளுக்க விட்டவை. அதில ஓராள் சசிகலா ரவிராஜ். இப்பிடியெல்லாம் நிறையக்குழப்பங்களோடதான் உந்த எலக்சன் ஒப்பேறியிருக்கு. வேறையும் நிறையக் குழப்பங்கள், குத்துவெட்டெல்லாம் நடந்ததாம். அதெல்லாம் நேரம் வரேக்க பட்சி சொல்லத்தானே போகுது.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் அச்சுறுத்தல் மாணவர்களுக்கு தெளிவூட்டல்

## 200 வளவாளர்கள் களத்தில்

### பதில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை

கொழும்பு, ஜன. 22

**போதைப்பொருள்களின் அச்சுறுத்தல் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

குறித்த போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்துக்காக 200 வளவாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

தேசிய இளைஞர் சேவை மன்ற பயிலுநர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## தொழில்சார் பாடத்திட்டம் பெப்ரவரியில் ஆரம்பம்

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக விசேட ஆலோசனை மற்றும் தொழில்சார் பயிற்சி பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 300 மையங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## வருவாயைவிட செலவு உயர்வு

*ஊடக அமைச்சர் பந்துல தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 22

2022 ஆம் ஆண்டை விட அதீத முன்னேற்றம் 2023 இல் எட்டப்பட்டபோதும் அதைவிட வேகமாக செலவுகள் அரசாங்கத்துக்கு அதிகரித்துள்ளன என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களிடமிருந்தும் மற்றும் ஏனைய அனைத்து வகையிலும் 3 ஆயிரத்து 201 பில்லியன் ரூபாவை 2023 ஆம் ஆண்டில் திறைசேரி பெற்றுள்ளது.

எனினும் அரச ஊழியர் சம்பளம், நலன்புரி மற்றும் நிவாரணம் உள்ளிட்ட விடயங்களுக்காக 2 ஆயிரத்து160 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 263 பில்லியன் ரூபா வட்டி மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், அரசாங்கம் நாளாந்த செலவுகளுக்காக 4,394 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளது - என்றார். (ச-இ)



## முக்கொம்பன் வீதியை புனரமைக்க கோரிக்கை

கிளிநொச்சி,ஸ்கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்குமிடையிலான வீதி சேதமடைந்திருப்பதால் முக்கொம்பன் கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

700 வரையான குடும்பங்கள் வாழும் முக்கொம்பன் கிராமத்தில் வீதி சீரமைக்கப்படாததால் அக்கராயனிலிருந்து முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை 2 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்திலிருந்து அக்கராயன் பிரதேச மருத்துவமனை, அக்கராயன் மகா வித்தியாலயம் 7 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளமையால் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முக்கொம்பன் மாதர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ப-13)

## மறுசீரமைப்பின் பலன் மக்களுக்குக் கிட்டும்

*சாகல ரத்நாயக்க கூறுகின்றார்*



அரசாங்கம் முன்னெடுத்துவரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்களின் பலன்கள் எதிர்காலத்தில் மக்களுக்குக் கிடைக்கும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (எ-இ)



## புதன்கால மாணவர் அரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் 'தொடர்கதையாகும் ஆக்கிரமிப்புக்கள்' எனும் தலைப்பிலான புதன்கால மாணவர் அரங்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடப் பரீட்சை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'திட்டமிட்ட சிங்கள பௌத்தமயமாக்கலும் பண்பாட்டு அழிப்பும்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் துணைத் தலைவர் நிதுர்சன் லம்பேட்டும், 'நிலமிழந்தால் பலமிழப்போம்!' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் துணைச் செயலாளர் சிவகஜனும் கருத்துரையாற்றினர். (ப-66)



## வேளாண்மைப் பயிலரங்கு

கிளிநொச்சி, ஜன.22

கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் காந்தி நிலையமும் இணைந்து நடத்திய இயற்கை வேளாண்மைப் பயிலரங்கம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. குறித்த பயிலரங்கில் இந்தியாவின் தமிழ் நாட்டின் இயற்கை வேளாண்மை வல்லுநர் பாமயன். இயற்கை வேளாண்மைப்பண்ணை ஆலோசகர் ராஜகணேஷ் மற்றும் இந்தப் பகுதி விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-13)

## ஜனநாயகத்தை நசுக்கும் முயற்சியை முறியடிப்போம்

*ஊடக சிவில் சமூக தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவிப்பு*

மக்களின் பேச்சுசுதந்திரம் கருத்துசுதந்திரம் ஆகிய வற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் அரசின் முயற்சிகளை கூட்டாக முறியடிப்போம் என ஊடக சிவில் சமூக தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தணிக்கையற்ற துல்லியமான பக்கச்சார்பற்ற தகவல்களை அடிப்படையாக வைத்து மக்கள் விவாதிப்பதற்கான கருத்துப் பரிமாறுவதற்கான தளத்தை கொண்ட சுதந்திரமான நியாயமான தேர்தலாக எதிர்வரும் தேர்தல் அமைவதை உறுதிசெய்யவேண்டும். குடிமக்களை மௌனமாக்கும் அச்சத்துக்கு உட்படுத்தும் எந்தச் சட்டங்களும் பாதிப்பை ஏற்படுத்துபவை. அரசியல்வாதிகளாலும் ஊழல் அதிகாரிகளாலும் அழிவை நோக்கி தள்ளப்பட்ட நாட்டுக்கு சட்டத்தின் மேல் அமர்ந்திருக்கும் சர்வாதிகாரிகள் அவசியமில்லை என்று அவர் தெரிவித்தார். (எ-இ)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

முல்லைத்தீவு, ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் பௌதீக வளப்பற்றாக் குறையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் இயங்கி வரும் தென்னியன்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் 113 மாணவர்களுக்கு புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ப-19)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (ம-27)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 19 . 07 . 1942

மறைவு 24 . 12 . 2023

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும். டச்சு வீதி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட

**சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை (குணம்)**

(ஸ்தாபகர், பரம்ஸ் மோட்டோர்ஸ், பரம்ஸ் ரான்ஸ்போட்)

**மண்ணை விட்டுப் பிரிந்த அப்பா**
**என்றும் எங்களை விட்டுப் பிரியவில்லை**
**இறைவனாக என்றும் எங்கள்**
**இதயங்களில் வாழ்வீர்கள் அப்பா**

24.12.2023 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நாளை (23.01.2024) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுவில் முதலாம் ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 809 8798,
077 774 3350

(CR 41605) S-1

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மண்ணில் 01 . 07 . 1934

மறைவு 02 . 02 . 2023

**அமரர் விமலசிங்கம் புஸ்பராணி**
திதி: பூர்வபக்க துவாதசி
(22.01.2024)

வாழ்வாங்கு வாழ்ந்த எம் தலைவியே
பண்பினால் எம்மை செதுக்கி
எமை வளர்த்த பேரன்னையே!
தள்ளாத போதிலும் தடுமாற்றம் ஏதுமின்றி
எமை சீராக வழிநடத்திய பெருந்தகையே
ஊறறிய பொறுமையின் பொக்கிசமாய்
ஒளிபரப்பிய குலதெய்வமே!
எப்போதும் உம் நினைவலைகள்
எம்மை விட்டு நீங்கா...

என்றும் நீர் வாழ்க!

சுந்தரபவனம்
சண்டிலிப்பாய் தெற்கு,
சண்டிலிப்பாய்.

நீங்காத நினைவுகளுடன்
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



மண்ணில் 05 . 01 . 1957

விண்ணில் 21 . 01 . 2024

## திருமதி ஹென்றி மரியகார்மெலா (வதனா)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹென்றி மரியகார்மெலா அவர்கள் நேற்று )21.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி மேரியம்மா தம்பதியரின் புதல்வியும் ஞானப்பிரகாசம் சின்னம்மா தம்பதியரின் மருமகளும் ஹென்றி (ஓய்வுபெற்ற சாரதி இலங்கை போக்குவரத்து சபை) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற றெஸ்லி, அருட்பணி இரோனியஸ் (பங்குத்தந்தை பலாலி) தினேஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும் டக்ளஸ் (இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமியாரும், டனிக்காவின் அன்புப் பேர்த்தியும், புவனேஸ்வரன், சந்திரலீலா, காலஞ்சென்ற டேவிட்ராஜா, மெற்றில்டா, அன்ரன்ஜெலாம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பேரின்பநாயகம் (ராசா), இராஜேஸ்வரி (ராசாத்தி), தேவதாஸ் (ரத்தினம்), டேவிட் (செல்லப்பாக்கியம்), மனோரஞ்சிதம், எமிலி வன்மலா (சந்திரா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு செபமாலை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருட்பணி ஹெ.இரோனியஸ்
(மகன்) 076 5698871
டக்ளஸ் (மருமகன்) - 076 6063 486

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41604) A-1

# மரண அறிவித்தல்



மலர்வு 09 . 05 . 1958

உதிர்வு 20 . 01 . 2024

## மனோகரன் ரஞ்சினி

சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் ரஞ்சினி அவர்கள் கடந்த (20.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோகரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சண்முகானந்தம் வரதலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும், கௌதமியின் பாசமிகு தாயாரும், அகிலத்திருநாயகி, விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னத்தம்பி, சொர்ணாம்பாள், ஜெயப்பிரகாஸ், ஜெயக்குமார், வளர்மதி, ஜீவானந்தம் (காலஞ்சென்றவர்), துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதாகரன் (ஹொலண்ட்), கவிதா (சிங்கப்பூர்), உதயாயினி (சவூதி), சரவணன் (இந்தியா), லக்ஷ்மி (இந்தியா), சசிதா (கனடா), கஜேந்திரன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சித்தியும், காயத்ரியின் (இந்தியா) பாசமிகு பெரியம்மாவும், அகிலன், பிரதீபா (ஜேர்மனி), வைகுந்தன்(UK), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 23,
சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 507 6069 (சின்னத்தம்பி - மைத்துனர்)
076 406 3780 (கௌதமி - மகள்)

(CS 27738) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் பொங்கல்விழா சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள சிவன் கோவிலில் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் கழக உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ரி-9)

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு அண்மையில் ஆச்சிரம மண்டபத்தில் மூத்த இசைச் சொற்பொழிவாளர் கவிமணி க. ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்றது. (ச-66)






## யாழ். மாவட்ட செயலகத்தில் பொங்கல்விழா கோலாகலம்!

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ். மாவட்டச் செயலக வருடாந்த தைப்பொங்கல் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலக முன்றிலில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத் தலைவர் இ. சுரேந்திரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்டச் செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-66)



இராணுவத்தினர், பொலிஸார், பூநகரிப் பிரதேச செயலகத்தினர் ஆகியோரின் பங்குபற்றலுடன் பொங்கல் நிகழ்வும், பாரம்பரிய விளையாட்டுகளும் அண்மையில் செயலக வளாகத்தில் இடம்பெற்றன. (ச-113)



சங்கானைப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் கடந்த புதன்கிழமை பொங்கல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. தொடர்ந்து ஊழியர்களிடையே பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெற்றன. (ப-125)



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத் தைப்பொங்கல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-66)

## மாந்தை மேற்கில் பொங்கல் விழா

மன்னார், ஜன. 22

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் 2024ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவும், விவசாயிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் பிரதேசெயலர் அரவிந்தராஜ் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை நடைபெற்றது.

இதன்போது பிரதேச செயகத்தினரால் விவசாயிகள் மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
# தைப்பூச உலகப் பெருமஞ்சத்திருவிழா



காலம் : எதிர்வரும் 25.01.2024 வியாழக்கிழமை

நேரம் : காலை 6.00 மணிக்கு **பால்குடப் பவனி** இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பம்

**குறிப்பு:** யாழ். குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்தும் பெரும் தொகையான பக்தர்கள் சென்றவருடம் போல் முருகப்பெருமானுக்கு பால்குடம் எடுப்பார்கள் என எதிர்பார்ப்பதனால் பால்குடத்திற்குரிய அனைத்து பொருட்களும் ஆலயத்தினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
**முற்பதிவுகள் 24.01.2024 புதன்கிழமை வரை ஆலய கரும்பீடத்தில் மாலை 4.00 - 6.00 மணிவரை மேற்கொள்ளலாம். (பால்குடம் பற்றுச் சீட்டு - 400/-)**

# மாபெரும் பொங்கல்

**காலை 9.00 - மாலை 3.00 மணிவரை) ஆலயத்திற்குச் சொந்தமான வயலில் இருந்து மாட்டுவண்டிலில் புதிர் எடுத்துவரப்பட்டு புத்தரிசி ஆக்கி பாரம்பரிய முறைப்படி பொங்கல் ஆரம்பமாகும்.**

**குறிப்பு:** தொலைவிலிருந்து வரும் முருகன் அடியவர்கள் வசதி கருதி பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. **வெண் பொங்கல் பொதி - 1200 /- சர்க்கரை பொங்கல் பொதி 2000/-**

**காலை 9.00 மணிதொடக்கம் 1008 சங்காபிஷேகம், சண்முகர்ச்சனை.**
**விசேடபூஜை அர்ச்சனைகள், இசைநிகழ்ச்சிகள், அன்னதானம், வழிபாடுகள் நடைபெறும்.**

**மாலை :** 6.00 மணிக்கு வசந்த மண்டப பூசை. 6.30 மணிக்கு முருகப்பெருமானாலே விரும்பி அமைக்கப்பட்ட நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்சதில் சண்முகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் நிகழ்வும் புகழ்பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்களின் இசையுடன் தமிழர்களின் பெருமை சொல்லும் பராம்பரிய கலை நடன நிகழ்வுகளான கரகம், இனியம், (பொம்மை, மான், மயில், குதிரை), ஆட்டங்களும், தீப்பந்தம், சிலம்பாட்டம், பொய்கால், பரதநாட்டியம், பறை, உடுக்கு, தம்பு, மிருதங்கம், இசை நிகழ்வுகளும் இடம்பெறும்.

முருகன் அடியவர்கள் அனைவரும் வந்து பால்குடம் எடுத்தும், பொங்கல் பொங்கியும், அர்ச்சனை வழிபாடுகளில் ஈடுபட்டும் உலகப்பெருமஞ்சவடம் தொட்டு இழுத்தும் தைப்பூச நன்நாளில் தாங்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் முருகப்பெருமானிடம் பெற்றுச்செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகசபையினர்,
இணுவில் கந்தசுவாமி கோயில்.

............ விளம்பர அனுசரணையாளர்கள் ............

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A.L தொழில்நுட்பப்பிரிவு
வெற்றிவாகை
மாதாந்தப் பரீட்சை

VKR
INTERNATIONAL (PVT) LTD
BRIGHTEN YOUR FUTURE WITH US
விமான ரிக்கற்றுக்கள் மற்றும் விசாக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம். IELTS exam மற்றும் IELTS மூலம் எம்மிடம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளலாம். அனைத்து நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் விசாக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலம். நாடுகளுக்குமான Travelinsurance பெற்றுகொள்ள முடியும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கால் தகராறால் மோதிய பெண்கள்

## இருவர் கைது; ஒருவர் சிகிச்சையில்

யுவதி ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இரு பெண்கள் நேற்றுமுன்தினம் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானோர் என்று கூறப்படும் பெண் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, உக்கிளாங்குளத்திலுள்ள வீடொன்றில் இருந்து கழிவுநீர் மற்றும் வெள்ளநீர் வீதியில் உள்ள வாய்க்காலில் விடப்படுவது தொடர்பாக இரு வீட்டார் இடையே ஏற்பட்ட முரண்பாடே தாக்குதலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப் படுகின்றது. முரண்பாடு மோதலாக மாறி, யுவதி மீது இரு பெண்கள் இணைந்து தாக்கியுள்ளனர். அதில் காயமடைந்த யுவதி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் அரச உத்தியோகத்தர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை- வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள பல வீதிகளில் வடிகாலமைப்பு சீர்செய்யப் படாதநிலை காணப்படுகின்றது என்றும் பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

(எ-110)

# சடலம் மீட்பு!

வவுனியா, ஜன. 22

வவுனியா - திருகோணமலை பிரதான வீதியில், வவுனியா எல்லைப்புறமான கெப்பற்றிக்கொலாவ பகுதியிலிருந்து நேற்றுச் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

60 வயது மதிக்கத்தக்க அந்த முதியவர் விபத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ப-110)

## கொள்வனவு செய்யப்படும்

நெல் கொள்வனவு செய்யப்படும்

077 634 1504

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒரு வீட்டின் கூரைகள், யன்னல்கள், கதவுகள் போன்ற மரத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

**(கோண்டாவில் கிழக்கு)**

தொடர்பு: **076 320 0039**

## வேலைவாய்ப்பு

154.E நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் இயங்கும்
ராம்மெடிக்கல் நிறுவனத்திற்கு விநியோக
உதவியாளர் (Delivery Boy) தேவை.
விண்ணப்பிக்க விரும்பியவர்கள்
மேற்காணும் முகவரிக்கு
சுயவிபரக்கோவையை
அனுப்பிவைக்கவும்.

**முகாமையாளர்**

## வேலையாள் தேவை

யாழ்நகரில் இயங்கும் கடை ஒன்றிற்கு பொருட்களின் எண்ணிக்கையை சரிபார்த்து அடுக்குவதற்கும் பொருள்களை விற்பதற்கும் ஆண் வேலையாள் தேவை. யாழ்நகரிற்கு அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

நிரந்தரமாக வேலை செய்பவர்களாக இருத்தல்வேண்டும்.

சம்பளம் - 30000/-

மதிய உணவு, மாலையில் தேநீரும் சிற்றுண்டியும் வழங்கப்படும்.

தரம் 10 படித்திருந்தால் போதுமானது.

(cs 53619) (N.1)

**077 614 5682**

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
01
1948

மறைவு
25
01
2021



### அமரர் சுப்பிரமணியம் கனகேஸ்வரி

திதி: துவாதசி (22.01.2024)

எங்கள் உயிரில் கலந்த தாயே!
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்று
ஓடி மறைந்தம்மா! நித்தம் எங்கள் கண்களுக்குள்
நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தாயே!
நினைவெல்லாம் உங்களைச்
சுமந்தல்லோ நிற்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
குடும்பத்தினர்.
077 329 6658**

C.C.T.M. **பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
22
10
1947

மறைவு
18
01
2024



### சரோஜினிதேவி இராசதுரை

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, Papua New Guinea மற்றும் அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சரோஜினி தேவி இராசதுரை அவர்கள் கடந்த 18.01.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (சட்டத்தரணி, புத்தூர்) புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசதுரை (Chartered Accountant, Air Ceylon, Audit Office Srilanka & Advisor to Auditor General of Papua New Guinea) அவர்களின் அன்பு மனைவியும், சர்வானந்தன், விபுலானந்தன், இந்திராதேவி, சத்தியானந்தன், சுமித்திராதேவி, காலஞ்சென்றவர்களான சதானந்தன், சுலோசனாதேவி, கிருபானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மதிசீலன் (சிட்னி), குணசீலன் (லண்டன்), குகசீலன் (சிட்னி), சிவசீலன் (சிட்னி), சிவசக்தி (சிட்னி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நித்தில அரசி, வாசுகி, காரோ, நிக்கோல், கிரிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், தர்ஷன், பவன், கேசவன், லக்ஷ்மி, மகேஸ், கிமாயா, அஷ்வின், இழைஜா, லேலா, ரோகான், கீர்த்திக், அவந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2024) செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மதிசீலன்.
+61431097614**

(CS 53623) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
25
11
1935

மறைவு
20
01
2024



### கணபதிப்பிள்ளை சரஸ்வதியம்மா

யாழ்ப்பாணம் மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரஸ்வதியம்மா கடந்த (20.01.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, மங்கையர்க்கரசி, திலகவதி, தேவவதி, மற்றும் திருஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற திலகராணி, லீலாவதி, ரவீந்திரன், ரஞ்சினி, றாகினி, காலஞ்சென்ற சுலோசனா, சுதாகரன், சுதாயினி, காலஞ்சென்ற சுபாசினி, வசந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பராணி, ஸ்ரீநாதன், செல்வராணி, பஞ்சலிங்கம், ஞானச்சந்திரன், கௌசலாதேவி, கோணேஸ்வரன், காலஞ்சென்ற கலியுகவரதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஸ்தூரி, மயூரன், வர்ணதீபன், அச்சனா, லக்சனா, லக்சன், துவாரகா, ஜதுர்சன், சோபிகா, றஜிகா, தர்சிகா, கார்த்திகா, மகிந்தா, பிரசாந், பிரசாந்தினி, ஜனதர்சி, ஜதுர்சிகா, சாம்பவி, சுகினா, சுகித், சுரேனா, துளசிகா, துளசிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டினோஷன், சோகித், சறோன், சஞ்சயன், நபிசன், சாதனா, தருண்சாந், சியானா, அக்சயனி, ஜஸ்னிகா, அதிரா, அருத்தன், அபிஜிதா, அத்விகா, அயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இராமநாதபுரத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மண்டைதீவு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(CS 27724) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தொற்றாநோய்ப் பரிசோதனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஒருங்கிணைப்புடன் கோண்டாவில் குடும்பநல சுகநிலையம் இணைந்து நடத்திய தொற்றாநோய்ப் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு தொடர்பான இலவச மருத்துவ முகாம் ஜே/99 வண்ணார்பண்ணை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-66)

## புலம்பெயர்தல் விழிப்புணர்வு!

சாவகச்சேரி ஜன.22

தென்மராட்சி பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி அலகினர் 'ஐ.ஓ.எம்.' நிறுவனத்தின் அனுசரணையுடன் நாவற்குழி கந்தையா கனகம்மா நினைவு மண்டபத்தில் கோவிலாக்கண்டி, நாவற்குழி கிழக்கு, கைதடி, நாவற்குழி, மறவன்புலவு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது. (ப-9)



## புனித செபஸ்தியார் ஆலயப் பெருவிழா!

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பிரசித்தி பெற்ற புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழா கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

திருவிழா திருப்பலி ஆரம்பமானதோடு திருப்பலியை சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர், அச்சுவேலி பங்குத்தந்தை மைக்கல் சௌந்தரநாயகம் ஒப்புக்கொடுத்தார். (ப-27)


सत्यमेव जयते

**Consulate General of India, Jaffna**

**Advt. No.JAF/ADM/578/01/2024**

The Consulate General of India, Jaffna is looking for a suitable candidate for filling up one (1) vacancy of the post of "Chauffeur/ Driver". Only Sri Lankan Nationals with minimum 'O' level qualification and having a valid heavy vehicle driving license with minimum 3 years of relevant work experience can apply. Details of the vacancy and the application form are available on Consulate's website https://www.cgijaffna.gov.in/announcement.

Interested candidates are requested to download the application form and submit the completed form by Post or in person to Head of Chancery, Consulate General of India, at14, Maruthady Lane, Nallur, Jaffna by 31st January, 2024.



# RE/MAX NORTH REALTY இன்

## 6ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற இரத்ததான முகாம்

RE/MAX NORTH REALTY







கடந்த 6 ஆண்டுகளாக எமக்கு ஆதரவளித்த சமூகத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், நடைபெற்ற இரத்த தான முகாம், உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம் என்ற தொனியோடு...

**RE/MAX NORTH REALTY** இன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணம் கன்னாத்திட்டி வீதியில் அமைத்திருக்கும் எமது **Re/Max North Realty** அலுவலகத்தில் சனிக்கிழமை **20/01/2024** காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இந்த இரத்தம் வழங்கும் நிகழ்வு இனிதே நடைபெற்றது.








எங்கள் ஊழியர்களதும் மற்றும் எமது சமூகத்தின் சுகாதார நலன் கருதி, நாங்கள் இந்த இரத்த தான முகாம் ஏற்பாட்டை செய்தோம். இந்த இரத்தம் மிகவும் இரத்தம் தேவைப்படுபவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த பயன்படும்.

இதில் பங்கேற்ற எங்கள் ரியல் எஸ்டேட் முகவர்கள் மற்றும் நலன் விரும்பிகள், யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் பணிபுரியும் வைத்தியர்கள், தாதிமார்கள், சுகாதாரத்துறை சார்ந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளும்.

(CS 27741 A-1


## 31ஆம் நாள் நினைவலைகள்




தோற்றம்
31.10.1982

மறைவு
23.12.2023

கடந்த 23.12.2023 அன்று சிவபதமடைந்த

### அமரர் பாலசுந்தரலிங்கம் மதனகுமார்

**(உத்தியோகத்தர், இலங்கை வங்கி, ஓட்டிசுட்டான்)**

அன்பும் பண்பும் கொண்டே
என்றும் வாழ்ந்த உத்தமனே
நன்றாய் கதைத்தே பேசி
எல்லோரின் அன்பையும் பெற்றவனே
நன்றாய் அறிவுதனை பெற்றே
நற்பணி புரிந்த நல்லவனே
என்றும் ஏங்கி அழுகின்றோம்
இனிய உறவை இழந்தே!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

குரும்பை கட்டி,
புலோலி வடமேற்கு,
புலோலி.

ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்
**திருமதி திலகவதி கிருஷ்ணானந்தன் குடும்பத்தினர்.**

(CR 41606)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்துக்குள் புகுந்து யானை அட்டகாசம்

புதுக்குடியிருப்பில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த காட்டு யானை ஒன்று மக்களின் வாழ்விடங்களைச் சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்ததுள்ளது. கைவேலியிலுள்ள குடியிருப்புகளுக்குள் புகுந்த யானை வேலிகளைச் சேதப்படுத்தியதுடன், அங்குள்ள கணேசா வித்தியாலயத்தின் மதிலையும் உடைத்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (எ-19)



வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பஜனை ஊர்வலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மேற்படி ஆலயத்திலிருந்து பக்திப்பூர்வமாக ஆரம்பமானது. (ம-66)

## நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம், குப்பிழான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தின் 2024ஆம் ஆண்டுகான புதிய நிர்வாகம் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. புதிய நிர்வாகத்தின் தலைவராக அ.அஜனும், செயலாளராகவ.விஜயபாஸ்கரனும், பொருளாளராக கு.விஜயகுமாரும், உபதலைவராக சு.செல்வநாயகமும், உபசெயலாளராக செ.சசிகாந்தும் தெரிவு செய்யப்பட்டனர். உதைப்பந்தாட்ட அணித் தலைவராக வி.கஜமுகனும், துடுப்பாட்ட அணித் தலைவராக ர.சுகுணனும், கரப்பந்தாட்ட அணித் தலைவராக மு.பிரகாசும் தெரிவு செய்யப்பட்டதுடன் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக நால்வர் நியமிக்கப்பட்டனர். (ப-66)



# பயணிக்கமுடியாத நிலையில் இளவாலை - கீரிமலை வீதி!

### சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜன.22**

**யாழ்ப்பாணம், இளவாலை ஊடாக கீரிமலை செல்லும் 788 வழித்தட வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றமையால் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இந்த வீதியைச் சீரமைக்குமாறு பல தடவைகள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த வீதியூடாக சேவையில் ஈடுபடும் பேருந்துகளும் வீதிச் சீரின்மையால் சேவையிலிருந்து விலகவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பெருந்திரளானோர் பங்கேற்கும் இளவாலை லூர்து மாதா ஆலயத் திருவிழா தேர்ப்பவனி எதிர்வரும் 11ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

அதனால் இந்த வீதியைச் சீரமைத்துத் தர தெல்லிப்பழை பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## 50 கிராம் கஞ்சா: இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன. 23

அச்செழு கொலணி பகுதியில் 50 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம-23)



# ராமர்கோவில் திறப்புவிழாவில் கலந்துகொள்வாராம் நித்யானந்தா

சென்னை, ஜன. 23

அயோத்தி நகரில் இன்றுராமர் கோயில் திறப்பு விழா கோலாகலமாக நடைபெறவுள்ள நிலையில், விழாவில் கலந்துகொள்ளப்போவதாக தலைமறைவாக உள்ள நித்யானந்தா அறிவித்துள்ளமை சர்ச்சையாகியுள்ளது.

உத்தரப் பிரதேசம், அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோயிலின் திறப்பு விழா நாளை நடைபெறுகிறது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, மடாதிபதிகள், அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் என 11 ஆயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நிலையில், நித்யானந்தாவின் எக்ஸ் பக்கத்தில், 'இந்த வரலாற்று மற்றும் அசாதாரண நிகழ்வைத் தவறவிடாதீர்கள். அயோத்தி கோயிலில் ராமர் பிரதிஷ்டை செய்யப்படுகிறார். இது உலகம் முழுவதையும் அலங்கரிக்கும் ஓர் நிகழ்வாகும். முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்து மதத்தின் உயர் மத தலைவர் பகவான் ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார்' என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் தேடப்பட்டு வரும் குற்றவாளியான நித்யானந்தா கைலாசா என்ற தனி நாட்டை உருவாக்கியுள்ளதாக அவரே கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பாலியல் வன்கொடுமை வழக்கில், 2010ஆம் ஆண்டு அவரது சாரதி கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நித்யானந்தாவை பொலிஸார் கைதுசெய்தனர். அதன்பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை அவர் தலைமறைவாகியே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பகுதியில் கர்ப்பவதிகளுக்கான 'முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு ஆனைக்கோட்டை சாவற்கட்டு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தரால் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது. (ப-66)



யாழ்ப்பாணம், பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் ஏற்பாட்டில் டெங்குக் களப் பரிசோதனை புலோப்பளை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் நடைபெற்றது. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈஸ்டர் தாக்குதலில் இறந்தோரை

# வேதசாட்சிகளாக அறிவிக்க வேண்டும்

## கர்தினால் மல்கம் நடவடிக்கை

கொழும்பு, ஜன. 22

ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை, வேதசாட்சிகளாக அறிவிக்கும்படி வலியுறுத்துவதற்காக வத்திக்கானை நாடவுள்ளதாக கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவரும் கர்தினாலுமான பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவித்துள்ளார்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதிகோரி தனது வலியுறுத்தல்களை தொடர்ந்தும் கர்தினால் வெளிப்படுத்தி வருகின்றார். இந்த நிலையிலேயே தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை வேதசாட்சிகளாக அறிவிக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

'2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தேவாலயங்களில் கொல்லப்பட்டவர்கள் இயேசுவின் மீதான முழு நம்பிக்கையாலேயே ஆலயங்களுக்கு வந்தனர். அவர்கள் தங்களை இயேசுவின் சாட்சிகளாக்கினர். ஆதலால், அவர்களை மறைசாட்சிகளாக அறிவிக்கும் நடவடிக்கை பொருத்தமானதாகவே இருக்கும். கத்தோலிக்கத் திருச்சபையின் விதிகளின் கீழ் ஒருவர் இறந்து 5 வருடங்களின் பின்னரே மறைசாட்சியாக அறிவிக்கப்படுவார். ஆதலால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்குப் பின்னர் அதற்குரிய முன்னெடுப்புக்களை நாம் மேற்கொள்வோம்' - என்றார். (அ-ம)

### ஹெரோய்ன்...

யால் உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி, மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய வழக்கொன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அந்த இளைஞர், கடந்த 19ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் திடீர் சுகவீனமுற்ற அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். அளவுக்கதிகமான ஹெரோய்ன் பாவனையே அவரது இறப்புக்குக் காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ம-27)

### தமிழ்த்தேசியக்...

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தல் திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது. சிறீதரன் வெற்றி பெற்று புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் தொடர்பிலும் தமிழரசுக் கட்சியின் எதிர்காலப் பயணப்பாடு தொடர்பிலும் 'உதயனுக்கு' நேற்றிரவு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

'தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெருவிருப்பம். அதனை முன்னிறுத்தியே தமிழரசுக் கட்சியின் தலைமைப்பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். இந்தநிலையில் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகிறேன். தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணிசெய்த சக தமிழ்த்தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009க்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்கமுடியாதசக்தியாகமிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ்மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது.

இதற்காக அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் கடந்தகால கசப்பான நினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன். தமிழ் மக்களின் நலனுக்காகவும் தமிழ்த் தேசியத்தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித்திருப்பது எம்முன்னால் உள்ள பெரும்பொறுப்பு. அதற்காக தமிழரசுக் கட்சி மட்டுமல்லாது, சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்கவேண்டும். சகல தமிழ்த் தேசியக்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை துரிதகதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம் - என்றார். (அ-ம-26)

### தமிழரசின்...

சிறீதரனை ஆதரிக்குமாறு தனது ஆதரவாளர்களைக் கோரியிருந்தார். இதனால் இந்தத் தேர்தல் சம்பிரதாயத்துக்கு மும்முனைப் போட்டியாக இருந்தாலும், உண்மையில் இருமுனைப்போட்டியாகவே இடம்பெற்றது.

தலைவர் தெரிவுக்கான தேர்தலில், 321 பேர் வாக்களித்திருந்தனர். இதில் சி.சிறீதரன் 184 வாக்குகளையும், எம்.ஏ. சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். 47 மேலதிக வாக்குகளால் சிறீதரன் வெற்றிபெற்று, தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவுள்ள கட்சியின் மாநாட்டில் கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக சி.சிறீதரன் பதவியேற்கவுள்ளார். (அ-ம-26-66)

### தமிழ்த் தேசியத்தின்...

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தெரிவு நடைபெற்று முடிந்த நிலையில் கட்சியின் புதிய தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு என் வாழ்த்துகள்.

இன்றைய காலகட்டத்தில் தமிழரசுக் கட்சியை விட வேறு பல தமிழ்த்தேசியக் கட்சிகளும் உருவாகிச் செயலாற்றி வருகின்றன, பலமாகவிருக்கின்றன. அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் இணைந்துதான் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும். ஆகவே, தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்குத் தமிழரசுக் கட்சி உரிய பங்களிப்புகளை வழங்கவேண்டும்

தமிழரசுக் கட்சி மிகநீண்டகாலப் பாரம்பரியமுள்ள கட்சி. பல தலைவர்களை உருவாக்கிய, தமிழ்த்தேசியத்தின் ஆணிவேராக விளங்கிய ஒரு கட்சி. கட்சியின் புதிய தலைவருக்கு நாங்கள் வாழ்த்துகள் கூறினாலும்கூட புதிய தலைவருக்கான தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட பரப்புரைகள், அதனால் ஏற்பட்ட மனமுறிவுகள் என்பன தமிழ்த்தேசிய உணர்வுகளுக்கு நிச்சயமாகச் சிறந்ததாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி எதிர்காலத்தில் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்பதுதான் முக்கியமான விடயம். அதுமாத்திரமன்றி அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டை அமைப்பதற்கு அல்லது முடிவுகளை எடுப்பதற்கு கட்சிக்குள்ளேயே இருக்கின்ற பிரிவு தாக்கத்தைச் செலுத்தும். எனவே, தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சரியான முறையில், யதார்த்தமாகச் செயற்பட்டு தமிழரசுக் கட்சிக்குள்ளே உருவாகியுள்ள அனைத்துத் தரப்புக்களையும் ஒருங்கிணைத்துச் செயற்படுவதன் மூலமாகத்தான் தமிழ்த்தேசியக் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

தமிழரசுக் கட்சி 1952ஆம் ஆண்டில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் பெற்றிருந்த நிலையில் கட்சி பின்னர் படிப்படியாக வளர்ந்து வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் முஸ்லிம் மக்களையும் சேர்த்து தமிழ்பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக வரக்கூடிய அளவுக்குப் பெரு வளர்ச்சியை அடைந்து மிகவும் பலமான கட்சியாகத் திகழ்ந்தது. இந்த வளர்ச்சிக்கு தலைமைகளின் நேர்மைத் தன்மை, தமிழ்மக்களின் விடுதலைக்காக அனைத்தையும் அர்ப்பணித்துச் செயற்பட்டமை ஆகிய காரணங்கள்தான் தமிழரசுக் கட்சியின்பால் மக்களை ஈடுபாடு கொள்ள வைத்தது - எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-ம-66)

### ஒன்றாக...

ஆதரவை வழங்குவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தலைவர் தெரிவுக்கான வேட்பாளர்களில் ஒருவராகவுமிருந்த எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வாக்கெடுப்பு முடிவுகள் வெளியான பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழரசுக் கட்சித் தலைவருக்கான தேர்தல் மிக ஆரோக்கியமான வகையில் இடம்பெற்றிருக்கின்றது. கட்சித்தலைவரை தேர்தல் மூலம் தெரிவுசெய்து எமது கட்சி உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியிருக்கின்றது. இதிலே வெற்றி பெற்ற நண்பன் சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது தலைவர் மாவை சேனாதிராஜா வழிநடத்திய தமிழரசுக் கட்சிப் பொறுப்பு, இப்பொழுது சிறீதரனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பயணத்திலே நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம். இதை நாம் இருவரும் தேர்தல் காலத்திலும் தெளிவாக மக்களுக்குச் சொல்லியிருக்கின்றோம். அவ்வாறே தொடர்ந்து பயணிப்போம்.

ஆகவே, எனது முழுமையான ஆதரவினைத் தற்போது ஜனநாயக முறையில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவர் சிறீதரனுக்கு வழங்குவேன் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்கிறேன் - என்றார். (அ-ம)

### உணவருந்தியவர்...

கதிரையில் அமர்ந்திருந்து உணவு அருந்திய குடும்பத்தலைவர் ஒருவர், திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். காரைநகரைச் சேர்ந்த மயில்வாகனம் ஐங்கரன் (வயது-41) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். வர்ணம் பூசும் வேலை செய்துவிட்டு வந்து மதிய உணவு அருந்திக்கொண்டிருந்தபோது திடீரென அவருக்கு விக்கல் ஏற்பட்டது. பின்னர் கதிரையில் அமர்ந்தவர் அப்படியே மயங்கிச் சரிந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26-100)

### சிறீதரனை...

இதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் சில அமைச்சர்கள், பெரும்பான்மைக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிலரும் சிறீதரனுக்குத் தமது வாழ்த்தைத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவான விடயத்தை தென்னிலங்கையின் இணைய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து நேற்று வெளியிட்டிருந்தன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் வயல்களை அழிக்கும் யானை

## விவசாயிகள் இரவுக் காவல்

கிளிநொச்சி, ஜன.21

கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தின் நெல் வயல்கள் யானைகளால் அழிக்கப்படுவதால் விவசாயிகள் இரவுக் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனைவிழுந்தான், முக்கொம்பன் போன்ற காடுகளிலிருந்து வருகின்ற யானைகள் ஸ்கந்தபுரம் 3 ஆம், 4 ஆம் வாய்க்கால்களின் வயல் நிலங்களில் இரவுவேளைகளில் நுழைந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

யானைகளால் ஏற்படும் அழிவுகள் தொடர்பாக கிராமஅலுவலர் மூலமாக கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு தகவல்கள் வழங்கப்பட்டபோதிலும் அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். (ப-13)

# கொடிகாமத்தில் திடீர் சோதனை!

சாவகச்சேரி, ஜன.22

கொடிகாமம் பொதுச்சந்தை மற்றும் நகரப்பகுதியில் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த சுகாதாரத் திணைக்கள ஆய்வுக் குழுவினர் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தத் திடீர் சோதனையை முன்னெடுத்தனர். (ப-9)

# வாய்க்கால் புனரமைப்பு

பருத்தித்துறை பிரதேசசபைக்குட்பட்ட திருநாவலூர், தம்பசிட்டிப் பகுதிகளில் அமைந்துள்ள வெள்ளவாய்க்கால் வடிகான் தூர்வரப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

இந்த வெள்ளவாய்க்கால் வடிகால் பகுதியின் மறுபக்கமாக அமைந்துள்ள வயல் நிலங்களில் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் தயாராகிவரும் நிலையில் குறித்த துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

விவசாயிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக பருத்தித்துறை பிரதேசசபையால் தூர்வாரும் பணி கடந்த தினங்களில் முன்னெடுக்கப்பட்டது. (ப-100)


## வீடு வாடகைக்கு

12 வருடங்களாக நடைபெற்று வரும் எமது நிறுவனத்திற்கு கிளைகளை விஸ்தரிப்பதற்காக கோப்பாய், திருநெல்வேலி, மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது... தொடர்புகளுக்கு

077 337 4261

## புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

தரம் : 1 - 5 வரையான வகுப்புகளுக்கு கற்பிக்கக் கூடிய ஆசிரியரகள் தேவை.

தகைமை: ஆரம்பக் கல்வி பயிலுனர் ஆசிரியர்
CINEC / NIGHTA - டிப்ளோமாதாரிகள்
A/L முடித்தவர்கள் (3 பாடச் சித்தி)

இடம் - யாழ்நகருக்குள் தொடர்பு: 076 427 3021

## டைனமிக் மூன்றாம் நிலை தொழிற்கல்வி வளாகம்

DTPE CAMPUS - யாழ்ப்பாணம்

டைனமிக் மூன்றாம் நிலை தொழிற்கல்வி வளாகம் ஆனது சர்வதேச அங்கீகாரம் கொண்ட பல்கலைக்கழக வளாகம் ஆகும்.கடந்த ஆண்டுகளில் அதிகளவான மாணவர்களின் பட்டப்படிப்பு பூர்த்திக்கு பங்களித்ததில் பெருமை கொள்கின்றது.

**பட்ட, பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள் (Graduate Studies)**

**BBA, BEd, B.Com, BA in English, BSc IT,**
**BEng in Civil Engineering / Software Engineering,**
**MBA, BSc Phsychology, MEd.**



1. Basic Qualification in Recognized Diploma with Work Experience or HND/Advanced Diploma or Higher Diploma
2. UGC Recognized & WES Approved
3. Flexible Payments Schemes
4. Flexible Class Schemes
5. Air Conditioned Class Rooms with Projector
6. Computer Labs Facilities
7. Qualified Lectures Panel
8. Recognized Qualification for Migration
9. Delivered on Hybrid Mode
10. Direct & Online Class
11. Weekend Classes for Workers


அனைத்து கற்கை நெறிகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (UGC) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது. சர்வதேசளவில் WES அங்கீகரமுள்ளது. விண்ணப்பதாரிகள் HND/Advanced Diploma/Higher Diploma / Diploma with Work Experience ஒன்றினை கொண்டிருப்பதன் மூலம் நேரடியாக இறுதியாண்டு கற்கை நெறிக்குள் நுழையும் தகுதியை பெறமுடியும். மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வளாகத்தில் பார்வையிடலாம். வருடாந்த பட்டமளிப்பு விழா கொழும்பு BMICHல் (பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்) நடைபெறும்.

விண்ணப்பங்களை பல்கலைக்கழக வளாகத்திலோ மின்னஞ்சல் மூலமாகவோ பெற்று கொள்ளலாம். விண்ணப்பங்களை பூர்த்தி செய்து **31/01/2024** க்கு முன் நேரடியாகவோ **dtpecampus@gmail.com** மின்னஞ்சல் மூலமோ அனுப்பும்படி கோரப்படுகிறது.

**மேலதிக விபரங்களுக்கு:**
**டைனமிக் மூன்றாம் நிலை தொழிற்கல்வி வளாகம் (DTPE CAMPUS)**
இல.100, மானிப்பாய் காரைநகர் றோட், (K.K.S. றோட் சந்தி, யாழ்ப்பாணம்)
**Website: www.dtpecampus.edu.lk**
**Phone: 0214380273 Mobile : 0770288711,0775438086**

CS 27740 A-1


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.01.2024 புதன்கிழமை
சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சொக்கலிங்கம் தங்கசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் நாளை (23.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் சாட்டி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.01.2024 புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வவுனியா கோயில்குளம், 6ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள அன்னாரின் தற்காலிக இல்லத்திலும், எதிர்வரும் 27.01.2024 சனிக்கிழமை 8 ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

குடும்பத்தினர்
த.கங்கேஸ் - 077 433 1689



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org